
# அரசு கல்வியியல் கல்லூரி

குமாரபாளையம் 638 183




# ஆண்டு மலர்

2004-2005

Scanned with CamScanner

# மலர்க்குழு

**திரு. மா. ஜெகநாதன்** எம்.எஸ்ஸி., எம்.எட்., எம்.பில்., முதல்வர் (பொறுப்பு)

**திருமதி. வெ. கலைச்செல்வி** எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,

(தமிழ் விரிவுரையாளர்)

**ஆர்.மகேஸ்வரி** (ஆண்டு மலர் செயலர்)


Scanned with CamScanner



மாண்புமிகு தமிழக முதல்வர்

**ஜெ. ஜெயலலிதா** அவர்கள்

Scanned with CamScanner



**பேரா.மா. ஜெகநாதன்** எம்.எஸ்ஸி., எம்.எட்., எம்.பில்.,

முதல்வர் (பொறுப்பு)

Scanned with CamScanner

# அரசு கல்வியியல் கல்லூரி

## குமாரபாளையம் - 638 183.

## நாமக்கல் மாவட்டம்.

கல்லூரி ஆண்டு விழா சிறப்பு விருந்தினர் அவர்களே! பேராசிரியப் பெருமக்களே! அலுவலக அன்பர்களே இனிய மாணவச் செல்வங்களே! உங்கள் அனைவரையும் இக்கல்லூரியின் 50-வது ஆண்டு விழா, விளையாட்டுவிழா மற்றும் அனைத்து மன்றங்களின் நிறைவு விழா ஆகிய முப்பெரும் விழாவிற்கு வரவேற்று இவ்வாண்டு அறிக்கையினை சமர்ப்பிப்பதில் பெருமை கொள்கிறேன்.

**கல்லூரி வரலாறு**

இக்கல்லூரி 1955-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் பேராசிரியர் திரு வி.சி.டைட்டஸ் அவர்களை முதல்வராகக் கொண்டு தொடங்கப்பெற்றது. குமாரபாளையத்திலுள்ள அரசு மேல்நிலைப்பள்ளியிந் ஒரு பகுதியாக இயங்கி வந்த இக்கல்லூரி 1972-ஆம் ஆண்டில் புதியதாக கட்டடம் கட்டப்பெற்றபின் இவ்விடத்திற்கு மாற்றப்பட்டது. இக்கல்லூரியில் 1959-ல் புலவர் பயிற்சி வகுப்பும், 1974-ஆம் ஆண்டு எம்.எட் பகுதிநேர வகுப்பும் தொடங்கப்பெற்றன.

1982-ஆம் ஆண்டு பகுதிநேர வகுப்பாய் இருந்த எம்.எட் பட்டவகுப்பு முழுநேர வகுப்பாக மாற்றப்பட்டது. 1990-ஆம் ஆண்டு இக்கல்லூரியில் பெண்களும் சேர்ந்து படிக்க அனுமதி வழங்கப்பட்டது. மேலும், இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கி இக்கல்லூரி வளர உறுதுணையாய் இருந்த ஜே.கே.கே மற்றும் எஸ்.எஸ்.எம் குடும்பத்தாருக்கும் முன்னாள் முதல்வர்களுக்கும் பெரியோர்களுக்கும் இக்கல்லூரியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகின்றேன். இக்கல்லூரியின் இவ்வாண்டு விழா பொன்விழா ஆண்டாகக் கொண்டாடப்படுகிறது.

**கல்லூரி மாணவர் சேர்க்கை**

இக்கல்லூரியில் பி.எட் பட்டப்படிப்பு பயில்வதற்காக 100 மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு பி.எட். வகுப்பில் சேரும் பொருட்டு 6660 மாணவ மாணவியர் விண்ணப்பித்துருந்தனர். கல்லூரிக் கல்வி இயக்குனரின் வழிகாட்டல் நெறிப்படி நுழைவுத்தேர்வு அடிப்படையில் 100 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். அதில் இரண்டு மாணவர்கள் தொடர்ந்து வருகைதராததாலும் தற்போது பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை 96 என்பது குறிப்பிடத்தக்கது. இக்கல்லூரி 1998-99 முதல் பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்று இயங்குகிறது. மேலும், இக்கல்லூரி தேசிய ஆசிரியர் கல்விக் கழகத்தால் (NCTE, Bangalore) அங்கீகாரிப்பட்டது..

Scanned with CamScanner

## மணவர் மன்றங்கள்

இவ்வாண்டு கீழ்கண்ட அனைத்து மன்றங்களின் பொறுப்பாளர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டு, ஒற்றுமை உணர்வோடும் பொறுப்போடும் செயல்பட்டு வந்துள்ளனர் என்பது பெருமைப்படத்தக்கதாகும்.

1. மாணவர் தலைவர் - கே. குமார்
2. மாணவர் துணைத்தலைவர் - ஆர்.செல்வி
3. ஆசிரியர் மன்றச் செயலர் - என்.டி.சீனிவாசன்
4. விளையாட்டுத்துறைச்செயலர் - பி.முகமது ஹவுஸ்
5. சமூகப்பணி மன்றச்செயலர் - பி.அசோக்குமார்
6. ஆண்டுமலர் செயலர் - ஆர்.மகேஸ்வரி
7. கைக்கலைத்துறைச் செயலர் - டி. கவிப்பிரியா
8. கேள்விகாட்சி கல்விச்செயலர் - என்.மாயக்கிருஷ்ணன்
9. பதிவேட்டுத்துறைச் செயலர் - கே.பரமேஸ்வரி
10. உயிரியல் துறைச் செயலர் - எம்.சரவணக்குமார்
11. பொருளறிவியல் துறைச்செயலர் -எம். நாகராஜன்
12. கணிதத்துறைச் செயலர் - ஆர்.பாரதி
13. ஆங்கிலத்துறை செயலர் - ஜி.கவிதா
14. தமிழ்த்துறைச் செயலர் - எம்.முகமதுஇஸ்மாயில்
15. நூலகத் துறைச் செயலர் - ஜீ.தேன்மொழி

## கற்பித்தல் பயிற்சி

இவ்வாண்டு இக்கல்லூரி மாணவர்களுக்காக உற்றுநோக்கல் மற்றும் கற்பித்தல் பயிற்சிகளுக்கு வழக்கம்போல் ஆறு வாரங்கள் ஒதுக்கப்பட்டன. இதற்கு முன் பயிற்சியாக நுண்ணிலைக் கற்பித்தல் பயிற்சி இக்கல்லூரியில் 16-08-2004 முதல் 21-08-2004 வரை வழங்கப்பட்டது. உற்றுநோக்கல் பயிற்சி 07-09-2004 முதல் 11-09-2004 வரையிலும் கற்பித்தல் பயிற்சி 01-11-2004 முதல் 07-12-2004 வரையிலும் மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டன. நாமக்கல் மாவட்டத்தைச்சார்ந்த அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,பள்ளிபாளையம் , அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி பள்ளிபாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி பல்லக்காபாளையம், அரசு ஆண்கள் மற்றும்பெண்கள் மேல்நிலைப்பள்ளி குமாரபாளையம், ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த அரசு ஆண்கள் மற்றம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி பவானி, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, சித்தோடு, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி கவுந்தபாடி, அரசு மேல்நிலைப்பள்ளி தளவாய் பேட்டை ஆகிய பள்ளிகளுக்கு பயிற்சி ஆசிரியர்கள் அனுப்பப்பட்டு கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. கற்பித்தல் பயிற்சியின் மூலம் பயிற்சி ஆசிரியர்களைப்பட்டை தீட்டிய வைரங்களாய் அறிவு ஒளிபெற உதவியுள்ள மாவட்டக்கல்வி அலுவலர்களுக்கும், பள்ளித்தலைமையாசிரியர்கள் அனைவருக்கும் வழிகாட்டிகளாய் செயல்பட்டுள்ள ஆசிரியர்கள் அனைவருக்கும் உளம்நிறைந்த நன்றியினை உரித்தாக்கிக்கொள்கிறோம்.

Scanned with CamScanner

## ஆசிரியர் - அலுவலர் பணியேற்பு - மாற்றம்

கல்லூரி (பொறுப்பு) முதல்வர் பேரா. மா. ஜெகநாதன் அவர்களின் பெருமுயற்சியால், கௌரவ விரிவுரையாளர் திரு.கே.பெரியசாமி அவர்கள் கல்லூரி கல்வி இயக்குநரின் அனுமதியின் பேரில் உயிரியல் துறையிலும், இக்கல்லூரியிலிருந்து ஒய்வுபெற்ற ஆங்கிலத் துறை தலைவர் பேரா. டாக்டர் ஆர். தங்கவேல் அவர்கள் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் மூலம் ஆங்கிலத் துறையிலும் பணியாற்றினார்கள். கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம் உயிரியல் மற்றும் ஆங்கிலத்துறை மாணவர்களுக்கு பெரிதும் பயனுடையதாக இருந்தது. காலியாக இருந்த கண்காணிப்பாளர் பணியிடம் நிரப்பப்பெற்று திருமதி த.லட்சுமி அவர்கள் 06-12-2004 முதல் பணியாற்றி வருகிறார்.

## கல்விப் பயணம் :

முதல்வர் (பொறுப்பு) திரு. மா. ஜெகநாதன் அவர்களின் ஏற்பாட்டின்படி, கல்விச்சுற்றுலா இரயில் பயணமாக ஹைதராபாத் சென்றது, கல்லூரியின் பொன்னேட்டில் குறிப்பிடும் நிகழ்ச்சியாக அமைந்தது.இந்த கல்விப்பயணமானது 13-02-2005 முதல் 17-02-2005 வரை மேற்கொள்ளப்பட்டு மாணவர்களுக்கு பயன்தரும் வகையில் அமைந்துள்ளது.

கல்விப் பயணத்தில் பளிங்குக் கற்களால் கட்டப்பெற்ற கலையம்சம் பொருந்திய பிர்லா கோவில் பெருமைமிகு சாலார்ஜங் அருங்காட்சியகம், பழமைவாய்ந்த கோல்கொண்ட கோட்டை, இந்து முஸ்லிம் ஒருமைப்பாட்டிற்கு உதாரணமாக சாலார்ஜங் சமாதிகளின் கட்டிட அமைப்பு, பிர்லா கோளரங்கம் தேசிய அறிவியல் கண்காட்சியகம், அழகிய காட்சிகளுடன் அமைந்த ஏரியிலுள்ள புத்தர் சிலை, மேலும் ராமோஜிராவ் திரைப்பட நகரம் ஆகிய அனைத்து இடங்களையும் எம் மாணவச்செல்வங்கள் பெரும் ஆர்வத்துடன் கண்டுகளித்தனர். இந்த நாட்களில், கல்விப் பயணிப்பணியை மிகச்சிறப்பாக நடத்திடத் தூண்டுகோலாய் அமைந்து நிறைவேற்றிட ஆர்வமுடனும் மிகப் பொறுப்புடனும் நடத்திக்கொடுத்த பேராசிரியர்கள் திரு மு. கந்தசாமி, திருமதி வெ. கலைச்செல்வி, திருமதி நூர்ஜஹான், திரு ச. மணிவண்ணன் மற்றும் அலுவலக ஊழியர்களையும் பாராட்டி மகிழ்கிறேன்.

## நூலகம்

2004 - 2005 ஆம் கல்வியாண்டில் நூலகத்தில் 100 புத்தகங்கள் ரூ.7300/- தொகைக்கு அரசு நிதி ஒதுக்கீட்டில் வாங்கப்பட்டது. கீழ்காணும் நாளிதழ்கள், கல்வியியல் குறித்த மாத இதழ்கள், பருவ வெளியீடுகள் ரூ.2700/- தொகைக்கு வாங்கப்பட்டன.

1.NCERT Publications - School Science, Value Education, Journal of Indian Education, Science Education.

2. காலச்சுவடுகள், புத்தகம் பேசுகிறது, தமிழரசு, விஞ்ஞானச்சுடர், கலைக்கதிர் -12 issue

3. தினமணி,The Hindu, Indian Express, Employment News.

Scanned with CamScanner

நூலகம் முற்றுலும் திறந்த முறை(Open Access System) பயனில் மாணவ, மாணவியர்கள் பயன்பாட்டிற்கு பெரிதும் உதவியாக இருந்தது. இக்கல்வியாண்டில் மாணவர்களால் சுமார் 800 புத்தகங்கள் உபயோகப்படுத்தப்பட்டன. பார்வைப் புத்தகங்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு எளிதில் பயன்படுத்தும் வகையில் இருந்தது.

## பிற விழாக்கள்

கல்லூரி வளாகத்தில் பொறுப்பு முதல்வர் அவர்கள் 15-08-2004 அன்று தேசிய கொடியை ஏற்றி கொண்டாடிய முதல்விழாவாக சுதந்திர தின விழா அமைந்தது. 26-01-2005 அன்று குடியரசு, தினவிழா, பொறுப்பு முதல்வர் அவர்களாலேயே கொண்டாடப்பட்டது. 01-10-2004 அன்று அனைத்து மன்றங்கள் துவக்க விழா, ஆசிரியர் தின விழா ஆகியவை டாக்டர் ஜெ.கே.கே.முனிராஜா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டது மிகச்சிறப்பாக அமைந்தது. முப்பெரும் விழாவாக கொண்டாடிய இவ்விழாவில் பல அரிய கருத்துக்களை மாணவர்களுக்கு வழங்கியது பயனுடையதாக அமைந்தது.

## பாடி வாழ்க்கை

பி.எட் மாணவர்களுக்கு சமூகப்பணி-பாடி வாழ்க்கை கல்லூரி வளாகத்தில் 20-12-2004 முதல் 24-12-2004 வரை ஐந்து நாட்கள் மிகச்சிறப்பாக நடைபெற்றது. பாடி வாழ்க்கை தொடக்கவிழா 20-12-2004 முற்பகல் 10 மணியளவில் திரு என். சம்பத்குமார், முதல்வர், எஸ்.எஸ்.எம். எல். மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி குமாரபாளையம் அவர்களால் இனிதே துவக்கி வைக்கப்பட்டது. கீழ்காணும் தலைப்புகளில் சிறப்பு விருந்தினர்கள் மாணவர்களுக்குத் தேவையான சீரிய கருத்துக்களை வழங்கினர்.

1. கல்வியும் சமூக நலமும் - திரு. என். சம்பத்குமார், முதல்வர் எஸ்.எஸ்.எம்.எல். மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம்
2. எய்ட்ஸ் விழிப்புணர்வு - டாக்டர் குகப்பிரியா வாசுதேவன், ஸ்ரீ சத்யநாராயணா மருத்துவமனை, குமாரபாளையம்
3. இளைஞர்களும் மனநலமும் - திரு.த.ஸ்டாலின் குணசேகரன், தலைவர் மக்கள் சிந்தனை பேரவை, ஈரோடு.
4. சாரண, சாரணீய விளக்கம் மற்றும் பயிற்சி வகுப்புகள்
5. ஆசிரியர் கடமைகள் - திரு ஆறுமுகம், முதல்வர், ரிலையன்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம், திரு ரங்கநாதன், உதவி தலைமையாசிரியர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம்.

Scanned with CamScanner

பொறுப்பு முதல்வர் திரு மா. ஜெகநாதன் அவர்கள் முதன்மை பாடி அலுவலராகவும், கல்லூரி நூலகர் திரு ச. மணிவண்ணன் துணைப்பாடி அலுவலராகவும் பொறுப்பேற்று சிறப்பாக பணியாற்றினர். மாணவ, மாணவியர்கள் இந்த 5 நாட்களில் தங்களின் ஆர்வம் மிக்க உழைப்பு மற்றும் ஒத்துழைப்பினை நல்கினர். கலைநிகழ்ச்சிகளின் மூலம் தங்களின் பல்வேறு மாறுபட்ட தனித்தன்மைகளையும் வெளிப்படுத்துபவர்களாகவும் விளங்கினர். கல்லூரி வளாகம் இவர்களின் களப்பணி மூலம் மேலும் தூய்மையடைந்தது குறிப்பிடத்தகுந்தது. தலைமைப்பண்பு, ஆளுமை,சகிப்புத்தன்மை, சகோதரத்துவம்,கடமையுணர்வு, நேரந்தவறாமை, கட்டுப்பாடு ஆகியவற்றை மாணவர்கள் மனதில் விதைக்கும் வண்ணம் இப்பாடி வாழ்க்கை சிறப்பு பெற்றது. சிறப்பு பேச்சாளர்கள், சிறப்புரைகள் மாணவ, மாணவிகளுக்கு வழிகாட்டும் அளவிலும், அறிவு கூட்டும் வகையிலும் அமைந்தன. பாடிவாழ்க்கை நிறைவுவிழா 24-12-2004 முற்பகல் 10 மணியளவில் திரு ஆறுமுகம் முதல்வர், ரிலையன்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம் மற்றும் திரு.ரங்கநாதன் உதவி தலைமையாசிரியர், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம் ஆகியோரின் இனிய சிறப்புரையோடு நிறைவு பெற்றது.

## விளையாட்டு விழா

இக்கல்லூரியில் உடற்கல்வி துறைக்கு ஆசிரியர் இல்லாத குறையினைப் போக்கி விளையாட்டுத்துறைக்கு பொறுப்பேற்று 15-03-2005, 16-03-2005 ஆகிய இரு நாட்களில் போட்டிகளை நடத்த உதவிய பேராசிரியர் திரு மு.கந்தசாமி வரலாற்றுத்துறை அவர்களுக்கும் விளையாட்டுப்பேட்டிகளில் கலந்து கொண்டு சிறப்பித்த மாணவச் செல்வங்களுக்கும் இக்கல்லூரியின் சார்பில் உளமார்ந்த பாராட்டுகளை உரித்தாக்குகிறோம். விளையாட்டுப்போட்டிகளை சிறப்பாக நடத்திக் கொடுத்த அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு ஆசிரியர் பெருமக்களுக்கும் அனுமதி அளித்த தலைமை ஆசிரியர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் இக்கல்லூரியின் இலக்கிய மன்ற ஆண்டு நிறைவு விழா போட்டிகள் 10-03-2005, 11-03-2005 ஆகிய நாட்களில் நடைபெற்றது. மாணவ மணிகள் இப்போட்டிகளில் ஆர்வத்தோடு கலந்து கொண்டு பரிசுகளை வென்றனர். பொறுப்பாசிரியராக இருந்து போட்டிகளை நடத்த உதவிய பேராசிரியர் திருமதி வெ. கலைச்செல்வி அவர்களுக்கும் பாராட்டுகளை உரித்தாக்குகிறோம்.

## மாணவர் உதவித் தொகை

இக்கல்லூரியில் இவ்வாண்டில் பிற்படுத்தப்பட்டோருக்கான கல்வி உதவித்தொகை 36 பேருக்கு ரூ.55,656/- வழங்கப்பட்டது. மேலும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான கல்வி உதவித்தொகை 23 பேருக்கு 1,37,205/- வழங்கப்பட்டுள்ளது. மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான கல்வி உதவித்தொகை 16 பேருக்கு 28,336/- வழங்கப்பட்டுள்ளது. மேலும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான கல்வி கடன் உதவித்தொகை 18 பேருக்கு ஒப்பளிப்புக்காக அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் அத்தொகையும் சம்பந்தப்பட்ட துறையிலிருந்து கிடைக்கப் பெற்றவுடன் வழங்கப்பட்டு விடும் எனத்தெரிவித்துக்கொள்கிறேன்.

Scanned with CamScanner

## கல்லூரி விடுதி

இக்கல்லூரியில் மாணவ, மாணவிகளுக்கான தன விடுதிகள் உள்ளன. அனைத்து மாணவ , மாணவிகளும் விடுதிகளிலேயே தங்கி படித்து வருவது கல்லூரியின் மற்றொரு அம்சமாகும். ஆண், பெண் இரு விடுதிகளுக்கும் பேராசிரியர் திருமதி ஆ.நூர்ஜஹான் அவர்கள் விடுதித் துணைக்காப்பளராக செயலாற்றி வருகிறார். மாலையில் சிறப்பான முறையில் மனதிற்கு நிம்மதி அளிக்கும் வகையில் பிரார்த்தனை கூட்டம் இனிதே நடைபெறுகின்றது. பகிர்ந்தளிக்கும் முறையில் குறைந்த செலவில் நிறைவான சேவை செய்யப்படுகிறது. இங்கு பணிபுரியும் தலைமை சமையல்காரர் திரு ராமநாதன் மற்றும் விடுதியின் ஏனைய உதவியாளர்களுக்கும் கல்லூரியின் சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## கல்லூரி கண்ட வளர்ச்சி

1. கல்லூரியின் ஆக்கப்பணிகளில் கீழ்கண்ட பணிகள் குறிப்பிடத்தக்கவாகின்றன. பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் கல்லூரி விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.
2. கல்லூரியின் சீரமைப்பு பணிக்காக பொதுப்பணித்துறையினரால் ரூ. 3,40,000/- நிதி ஒதுக்கப்பட்டு பல்வேறு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றது.
3. கல்லூரியின் தேர்ச்சி சதவீதம் தொடர்ந்து 100% ஆக இருந்து வருவது எங்களை பூரிப்படையச் செய்யும் பெருமைக் கொள்ளத்தக்க செய்தியாகும் என்பதை கூறிக்கொள்கிறோம்.

## பணியிடைப்பயிற்சி

பேராசிரியர் அ.நூர்ஜஹான் கல்வியியல் விரிவுரையாளர் 01-11-2004 முதல் 21-11-2004 முடிய பாரதிதாசன்பல்கலைக்கழகத்தால் நடத்தப்பெற்ற புத்தொளிப்பயிற்சியில் கலந்து கொண்டார். மேலும் கீழ்காணும் பேராசிரியர்கள் ஆசிரியர் பணியிடைப்பயிற்சிக்காக (பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் மைய அரசின் நிதி ஒதுக்கீட்டில் நடைபெற்றது) பல்வேறு கல்விநிறுவனங்களில் பெற்ற பயிற்சி விவரம் கீழ்க்காணுமாறு உள்ளது.

Scanned with CamScanner

## ஆசிரியர் பணியிடைப்பயிற்சி விவரம்

| | | | |
|---|---|---|---|
| 01. | பேரா. மு.கந்தசாமி<br>வரலாற்று<br>விரிவுரையாள் | 17-11-2004 முதல்<br>19-11-2004 முடிய<br>29-11-2004 முதல்<br>01-12-2004 முடிய | சென்னை,<br>சைதாப்பேட்டை<br>ஆசிரியர் கல்வி<br>நிறுவனம் |
| 02. | பேரா.வெ,கலைச்செல்வி<br>தமிழ் விரிவுரையாளர் | 22-11-2004 முதல்<br>24-11-2005 முடிய | சென்னை, லேடி<br>வெலிங்டன்<br>கல்வியியல் கல்லூரி |
| 03. | பேரா.அ.நூர்ஜஹான்<br>கல்வியியல் விரிவுரையாளர் | 25-11-2004 முதல்<br>27-11-2004 வரை | சென்னை, லேடி<br>வெலிங்டன்<br>கல்வியியல் கல்லூரி |
| | பேரா.அ.நூர்ஜஹான்<br>கல்வியியல் விரிவுரையாளர் | 23-03-2005 முதல்<br>24-03-2005 வரை | மதுரை காமராஜ்<br>பல்கலைக்கழகம்<br>மதுரை |
| 04. | முனைவர் அ.தேவகி<br>கல்வியியல் விரிவுரையாளர் | 29-11-2004 முதல்<br>01-12-1004 வரை | சென்னை, லேடி<br>வெலிங்கடன்<br>கல்வியியல் கல்லூரி |
| | முனைவர் அ. தேவகி<br>கல்வியியல் விரிவுரையாளர் | 23-03-2005 முதல்<br>24-03-2005 வரை | மதுரை காமராஜ்<br>பல்கலைக்கழகம்<br>மதுரை |

மேலும் மைய அரசின் நிதி உதவியின் கீழ் பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தின்படி ரூ.29,60,000/-நிதி ஒதுக்கீட்டில் ஆறு மாவட்டங்களில் (சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், கிருஷ்ணகிரி, தருமபுரி) உள்ள சுமார் 800 பட்டதாரி ஆசிரியர்களுக்கு பணியிடைப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 22 பணியிடைப்பயிற்சி நடைபெற்றுள்ளது. மேலும் 18 பயிற்சிகளுக்கு முதல்வர்(பொறுப்பு) பேரா.மா.ஜெகநாதன், ஒருங்கிணைப்பாளர் அவர்களும் பேரா. மு.கந்தசாமி, வரலாற்று விரிவுரையாளர் அவர்கள் பயிற்சிக்கான அனைத்து பணிகளையும் சிறப்பாக நடத்த திட்டமிட்டுள்ளனர்.

## ஜே.கே.கே. சம்பூரணியம்மாள் அறக்கட்டளை :

திரு. ஜே.கே.கே.முனிராஜா அவர்களின் குடும்பத்தினர் ஜே.கே.கே. சம்பூரணியம்மாள் அறக்கட்டளையை நிறுவ அவ்வறக்கட்டளையில் இருந்து கிடைக்கக்கூடிய வருமானத்தில் பி.எட்., மாணவர்களின் பல்கலைக்கழகத் தேர்வில் உளவியல் பாடத்தில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பெற்ற மாணவர்களுக்கு பல ஆண்டுகளாக பரிசு வழங்கி வருகின்றனர். இத்தருணத்தில் இவ்வறக்கட்டளையை நிறுவிய ஜே.கே.கே. குடும்பத்தினருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

## ஆசிரியப்பணி அறப்பணி :

அதற்கே உன்னை அர்ப்பணி என்ற பொன்மொழிக்கு ஏற்ப கல்விப்பணியில் தம்மை முழுமனதாய் அர்ப்பணித்து நாட்டின் வருங்காலச்சிற்பிகளாய் ஆசிரியர்களை உருவாக்கும் பணியைச் செய்துவரும் எமது பேராசிரியப்பெருமக்களுக்கும், கல்லூரி வளர்ச்சிக்கு உறுதுணையாய் நிற்கும் அலுவலக அன்பர்களுக்கும் அன்புசார் பெற்றோர்களுக்கும் மாணவ கண்மணிகளுக்கும் எனது உளங்கனிந்த நன்றிகளை உரித்தாக்கி ஆண்டறிக்கையை நிறைவு செய்கிறேன்.

- சுபம் -.

Scanned with CamScanner

# எண்ணெய் மருத்துவமும் நீர் மருத்துவமும்

**வெ. கலைச்செல்வி**

முதுநிலை தமிழ் விரிவுரையாளர்
மற்றும் தமிழ் துறைத்தலைவர்,
அரசு கல்வியியல் கல்லூரி,
குமாரபாளையம் - 638 183.
நாமக்கல் மாவட்டம்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற ஆன்றோர் வாக்கிற்கேற்ப இன்று உடல்நலத்தை அனைவரும் நோயின்றிப் பேணுவது இன்றியமையாததாகிவிட்டது. நாம் வாழும் சுற்றுச்சூழல், உண்ணும் உணவு, நீர், காற்று ஆகியன மாசுபட்டுக்கொண்டே வருகின்றன. அறிவியல் வளர்ச்சி அதிகரிக்க அதிகரிக்க, நோய்களின் எண்ணிக்கையும் கூடிக் கொண்டே வருகின்றன. வேகமான இயந்திர உலகில் மனிதன் உணவு உண்பதும் இயந்திரமாகவும், செயற்கையானதாகவும் ஆகிவிட்டது. உணவுப்பொருட்கள் செயற்கை உரங்களின் தன்மையோடே வருகின்றன. சுத்தமான காற்றும், குடிநீரும் விலைகொடுத்து வாங்கும் நிலைக்கு வந்துவிட்டன. மாசுபட்ட சூழல் மனிதர்களை எளிதில் நோய்வாய்ப்படச் செய்வதால் ஒவ்வொருவரும் உடல்நலத்தில் அக்கறை கொள்ளுவது இன்றியமையாததாகிவிட்டது. உடற்பயிற்சி செய்வது அவசியம் என்று அறிந்தும் உடற்பயிற்சியை யாரும் செய்வதில்லை. உண்டு உண்டு உடலில் நோயினை ஏற்றிக்கொண்டு வாழ்வைச் சிக்கலாக்கிக் கொள்ளும் மக்களுக்கு நோயின்றி வாழ உதவுவது எண்ணெய் மருத்துவமும், நீர்மருத்துவமுமாகும்.

### எண்ணெய் மருத்துவம் ( சோவியத் நாட்டு மருத்துவம்) :

சோவியத் ஒன்றியத்தைச் சார்ந்த டாக்டர் மெத்கராஷ் என்பர் மனித உடலைப் பல நோய்களிலிருந்து காப்பாற்றக் கண்டறிந்த மருத்துவமுறை எண்ணெய் மருத்துவம், டாக்டர் மெத்கராஷின் கூற்றுப்படி புற்றுநோயிலிருந்து இதயவலி வரையிலான பல்வகைப்பட்ட, நீண்ட கால நோய்களை எண்ணெய் மருத்துவம் தீர்க்கின்றது. எண்ணெய் மருத்துவம் என்பது ஆங்கிலத்தில் 'ஆயில் புல்லிங்' என்றழைக்கப்படுகிறது.

### செய்முறை :

தூய்மையான சூரியகாந்தி அல்லது நிலக்கடலை அல்லது நல்லெண்ணையை ஒவ்வொருவரும் காலையில் வெறும் வயிற்றில் பல் துலக்கிய பிறகு இரண்டு தேக்கரண்டி அல்லது பத்துமில்லி லிட்டர் வாயில் ஊற்றிக் கொள்ள வேண்டும். பதினைந்திலிருந்து இருபது நிமிடங்கள் நன்றாகக் கொப்பளிக்க வேண்டும். இருபது நிமிடங்களுக்கு பிறகு எண்ணெய் மஞ்சளாக இருப்பது வெண்மை நிறமாக நீர்த்து விடும். எண்ணெய் நீர்க்கும் வரை நன்றாகக் கொப்பளிக்க வேண்டும். எண்ணெய் நீர்த்துவிட்டால் அதனை அப்படியே சிறிது கூட விழுங்காமல் உமிழ்ந்து விட வேண்டும்.

Scanned with CamScanner

உமிழ்ந்த பிறகு நான்கைந்து முறை நன்றாகக் கழுவி வாயைத் தூய்மைபடுத்த வேண்டும். பற்களை நன்றாகத் தேய்த்து விட வேண்டும். இதனால் கிருமிகள் கேடு விளைவிக்கும் பொருட்கள் வெளியேற்றப்படுகின்றன.

## எண்ணெய் கொப்பளித்தல் செய்வதற்கேற்ற நேரம் :

விடியற்காலையில், காலை உணவிற்கு முன், பல் தேய்த்த பிறகு செய்ய வேண்டும். ஒரு நாளைக்கு மூன்று வேளையும் உணவு உண்பதற்கு முன் காலி வயிற்றுடன் தான் செய்ய வேண்டும்.

முதலில் கொப்பளிக்கும் வேறு எண்ணெய்யின் மணத்தால் சிலருக்கு வாந்தி ஏற்படலாம். ஆனால் இரண்டு நாட்கள் செய்தால் அந்த உணர்வு மறைந்து, எண்ணெய் கொப்பளித்தலை ஒவ்வொருவரும் அனுபவித்து, ரசிக்க ஆரம்பித்து விடுவர் என்பது ஆய்வாளர் கண்ட உண்மை.

## யார் யார் எண்ணெய் மருத்துவம் செய்யலாம் :

உடல்நலக் குறைவுடையவர்கள், நல்ல உடல்திறன் உடையவர்கள், பெண்கள், ஆண்கள், குழந்தைகள் யார் வேண்டுமானாலும் வயது வேறுபாடின்றி எண்ணெய் கொப்பளித்தலைக் கடைப்பிடிக்கலாம்.

## எண்ணெய் மருத்துவம் செய்யும் காலம் :

நல்ல பசி, அமைதியான உறக்கம், நல்ல மனநிலை ஆகியவை வரும் வரை தொடர்ந்து செய்ய வேண்டும். தற்காலிக நோய்கள் இரண்டு மூன்று நாட்களில் குணமாகும். நாள்பட்ட நோய்கள் குணமாக நீண்ட காலமாகலாம். ஆனால் உடலில் மாறுதல்கள் தெரிவதற்கு ஒன்பது மாதங்கள் முதல் ஓராண்டு காலம் எண்ணெய் மருத்துவம் கட்டாயம் செய்ய வேண்டும்.

## எண்ணெய் மருத்துவத்தின் செயல்பாடுகள் :

நோயுண்டாக்கும் நுண்ணுயிரிகள், நச்சு கலந்த வேதிப்பொருட்கள், முறையற்ற உணவுப்பழக்க வழக்கங்கள் இவற்றால் உடலில் நோய் உண்டாகின்றது. எண்ணெய் கொப்பளித்தலின் மூலம் அண்ணத்தில் உள்ள 'மியூகஸ் மெம்ப்ரேன்' வழியாக உடலில் உள்ள நச்சுப் பொருட்கள் உமிழ்நீர் மூலம் வெளியேற்றப்படுகின்றன. இதனால் மனித உடலை அழிக்கும் நுண்கிருமிகளும் உடலிலிருந்து நீங்குவதால், உடல் புத்தொளியுடன் திகழ ஏதுவாகின்றது.

இரத்த ஓட்டம் குறைந்து போகும்போது உடலின் செயல்பாடுகளும் குறைகின்றன. உடலில் எண்ணெய்கள், கொழுப்புப் பொருட்கள் இரத்த நாளங்களில் படிவதால் இரத்த ஓட்டம் சீராகச் செல்வது தடைபடுவதோ அல்லது நின்று போவதோ நிகழ்கின்றது.

எண்ணெய் கொப்பளித்தல் மூலம் இரத்த ஓட்டம் சீராகின்றது. கொழுப்புப் பொருட்கள் நாளடைவில் கரைந்து விடுவதால் உடலின் எல்லா பாகங்களுக்கும் இரத்தம் ஒரே சீராகச் செல்கின்றது. கடும் பாதிப்புக்குள்ளான உடல்பாகம் குணமடைய அதிககாலம் ஆகலாம். ஆனால் சிறு பாதிப்புக்குள்ளான உடல்பாகம் நோயிலிருந்து விடுபடுவதை ஒவ்வொருவரும் கண்கூடாகக் காணலாம்.

Scanned with CamScanner

## எண்ணெய் மருத்துவத்தால் குணமாகும் நோய்கள் :

டாக்டர் மெத்தகராஷின் கூற்றுப்படி தும்மல், சளி, இருமல், ஆஸ்த்மா, மூட்டுவலி, முதுகுவலி, பல்,ஈறு சம்பந்தமான நோய்கள், பார்க்கின்சன் நோய்கள், கழுத்துப்பிடிப்பு, இதய நோய்கள், வாய்ப்புண்கள், கொப்புளங்கள், தலைவலி, ஒற்றைத்தலைவலி, இரத்த நோய்கள், வலிப்பு, தூக்கமின்மை, வயிற்றுப்புண், மாதவிடாய், தொடர்பான நோய்கள், முகப்பருக்கள், தழும்புகள், படை, செதில்படை (ஸோரியாசிஸ்) கண்ணுக்குக் கீழ் கருவளையம் பக்கவாதம், நுரையீரல் நோய்கள், காது நோய்கள், மலச்சிக்கல் போன்ற பெரும்பாலான நோய்கள் எண்ணெய் மருத்துவத்தால் குணமானதற்குச் சாட்சிகள் உள்ளனர்.

## எண்ணெய் மருத்துவத்தின் பயன்கள் :

1. வயது கூடிப்போவதைத் தடுக்கிறது.
2. நோய்களைக் குணப்படுத்துவதுடன் நோய் எதிர்ப்பு சக்தியைக் கொடுக்கிறது.
3. முகம் பொலிவடைகிறது.
4. முடி நரைப்பது தடுக்கப்படுகிறது.
5. உடல் நோய் ஏதுமின்றி ஆரோக்கியமாகப் பேணப்படுகிறது.

## உடல் நலம் பெற உயரிய நீர்ச்சிகிச்சை (ஜப்பானிய மருத்துவமுறை) :

தூய நன்னீரைக் குடிப்பதன் மூலம் பல நோய்கள் சரிசெய்யப்படுகின்றன. ஒரே சமயத்தில் போதுமான தண்ணீர் அருந்துவதால் குடலில் புதிய நல்ல இரத்தத்தை உண்டாக்குவதற்கு ஹீமோபோலசஸ் குடலுக்கு உதவுகிறது. நீர்ச்சிகிச்சை முறை உடலில் புதிய இரத்தத்தை உண்டாக்கி, நாம் நோயின்றி வாழ உதவுகின்றது. உடல்நலத்தைக் காப்பதில் நீர் முக்கிய பங்கினை வகிக்கின்றது. உணவு செரிப்பதற்கும், செரித்த பின் ஆற்றல் கிடைக்கவும் நீர் உதவுகின்றது. ஆனால் உணவு உட்கொள்ளும் போதும், உணவு உட்கொண்ட உடனேயும் நீர் அருந்தக்கூடாது. உணவு உண்டபின் நான்கு மணி நேரமும் இரவு நேரம் உறங்கும் முன்னரும் நன்னீர் பருகவே கூடாது. விடிந்தபின், விழித்தெழுந்தவுடன் நீர் பருக வேண்டும்.

குறைவான நீர் பருகுவதால் உடல் வற்றிப் போகின்றது. உயிரின் வேதியியல் உடலில் நடைபெற நீர் மிகவும் தேவை. போதுமான அளவு நீர் அருந்தாதபோது மலச்சிக்கல் ஏற்பட்டு, அதுவே பின்னர் பல நோய்களுக்கும் மூலகாரணமாகின்றது. நச்சு வாயுக்களை உற்பத்தி செய்து சீரணப் பிரச்சனைகளையும், பசியின்மையையும் உண்டாக்குகின்றன.

## நீர் மருத்துவமுறை :

காலையில் நேரத்தில் எழுந்து பல்துலக்குவதற்கு முன்பு வாயினை நன்கு கொப்பளித்துவிட்டு ஆறு டம்ளர் அதாவது 1.25 லி நீர் பருக வேண்டும். நீரினைக் குடிக்க ஆரம்பித்தவுடன் தொடர்ந்து நிறுத்தாமல் குடிக்க வேண்டும். நீர் அருந்தி ஒரு மணி நேரத்திற்குப் பிறகே உணவு ஒவ்வொரு கிலோ எடைக்கும் 30-40 மில்லிகிராம் நீர் பருக வேண்டும். வெப்பநிலை மிகுதியாக உள்ள பகுதிகளில் வாழ்பவர்கள், உடலுழைப்பு மிக்கவர்கள் இன்னும் அதிகப்படியான நீரினைப் பருக வேண்டும்.

Scanned with CamScanner

இந்நீர் மருத்துவத்தை யார் வேண்டுமானாலும் கடைப்பிடிக்கலாம்.

### நீர் மருத்துவத்தால் உடனே ஏற்படும் மாற்றங்கள் :

1. மலச்சிக்கல் நீங்குகின்றது.
2. சிறுநீர் அதிகம் வெளியேறும்.
3. சுறுசுறுப்பு உண்டாகும்.
4. தொப்பையிருந்தால் குறைகின்றது.

### குணமாகும் நோய்கள் :

1. சளித்தொல்லை நீங்குகின்றது.
2. நாள்பட்ட தலைவலி சரியாகின்றது.
3. மலச்சிக்கல் இல்லை.
4. சர்க்கரை, இருமல், மூட்டுவலி நீங்குகின்றது.
5. இரத்த அழுத்தம், சோகை, வாத நோய்கள்
6. ஆஸ்துமா, காசநோய், இருமல்
7. அமில நோய்கள், நீரழிவு, மூலம், மாதவிடாய் தொந்தரவுகள்.

### முடிவுரை :

பசித்துப் புசித்தால் நோயில்லை. ஆதலால் நீண்ட காலம் இளமையுடனும், நோயின்றியும் வாழ நல்ல உணவு, தூக்கம், நோயின்றி ஆரோக்கியமாக இருத்தல் ஆகியன அவசியமாகின்றன. மருத்துவரிடம் சென்றும் பலர் நோயில் சிக்கித் துன்புறுகின்றனர். முறையாக எண்ணெய் மருத்துவமும், நீர் மருத்துவமும் ஒவ்வொருவரும் செய்து வந்தால் நோயின்றி, ஆரோக்கியமாக வாழலாம் என்பது பலர் கண்டறிந்து கடைபிடித்து வரும் முறையாகும்.

### பார்வை நூல்கள் :


1. வியத்தகு எண்ணெய் மருத்துவம் - தும்மல் கோட்டேசுவர ராவ்
2. இயற்கை மருத்துவம் - காந்திய இலக்கியச்சங்கம், மதுரை - 625 020.


Scanned with CamScanner

# இயற்கை எழில் மரம் ஓர் வழிகாட்டி

இரும்பாயுதம் கொண்டு இடித்தாலும்
இடிந்து விடாத பாறை!
பசுமையான வேருக்கு
பாங்காய்ப் பிறக்கும்!
-தளராமல் முயன்றால்
தரணியில் உயரலாம் என்பதற்கு வழிகாட்டி!

தென்றல் தீண்டினாலும்,
காற்று கடுமையானாலும்
தலைக்கனமில்லாமல் தலையாட்டும்
- சாகும்வரை சமாதானம் பேசும்
சார்க் அமைப்பினர்க்கு ஒரு வழிகாட்டி!



கள்ளச்சாரயத்திற்குதவும்
கருவேல மரம் - காட்டில்!
உடற்பிணி போக்கும் வேம்பு - வீட்டில்!
- நன்மைக்கும் தீமைக்குமான
வெகுமதிக்கு ஓர் வழிகாட்டி!

கரவளியை உட்கொண்டு
உயிர்வளியை உலகுக்களிக்கும்!
- பிறர் தீமை மறந்து
நன்மை செய்ய ஓர் வழிகாட்டி!

வழிகாட்டுவது மரந்தான்!
மனிதன் அதை மறந்தான் !

ப.ராஜவேல்
சுழல் எண். 42,
வரலாறு - தமிழ்

---

## முரண்பாடு

வீட்டின் பெயரோ
அன்னை இல்லம்
அன்னை இருப்பதோ
முதியோர் இல்லம் !

சிந்திக்கொண்டு செல்லும்
தண்ணீர் லாரியின்
பின்புற வாசகம்
தண்ணீரை வீணாக்காதீர்கள்

இரா. செல்வராஜ், பொருளறிவியியல்- தமிழ்

## ஹைக்கூ

வற்றாத ஜீவநதிகள் வற்றிய பின்னும்
ஓடுகின்றன.
தெருச்சாக்கடைகள்

காற்றுடன் உறவு கொண்டதால்
கற்பமானது
பலூன்

சுமங்கலி பூசையில்
விதவையாய்
மல்லிகைப்பூ

-இரா. மகேஸ்வரி
சுழல் எண்.92



## நினைத்துப்பார்

துடுப்பின்றி படகு கரை சேரலாம்!
சிறகின்ற பறவை கூடு அடையலாம்!
விரலின்றி கை ஓவியம் வரையலாம்!
இடியின்றி வானம் மழை பெய்யலாம்!
பகலின்றி நாள் இரவு கடக்கலாம்! - ஆனால்
முயற்சியின்றி எதுவும் பெற முடியுமா?

---

## சிந்தனை கதவை மூடாதீர்

- தோல்வி என்பது தள்ளிப்போட்ப்பட்டு இருக்கும் வெற்றி!

- வெற்றியாளர்கள் எதையும் வித்தியமாகச் செய்வதில்லை! அவர்கள் செய்வதே வித்தியமாக இருக்கும்!

- வாழ்க்கையில் நம்மிடமிருந்து பிரிக்க முடியாத செல்வம் ........ இந்த கணம் .........இந்த வினாடி!

- வெள்ளித்தட்டில் வைத்து பட்டுத்துணியால் மூடி ஒருவர் மற்றவருக்கு கொடுக்க முடியாத ஒன்று உண்டென்றால் அது `வெற்றி` ஆகும்.

- இன்று தலைகுனிந்து செய்வதெல்லாம் நாளை தலை நிமிர்ந்து நடப்பதற்கே!

- வெற்றிப்படிகளில் ஏற விரும்புவது யாராக இருந்தாலும் அவர்களைக் குப்புறத்தள்ளிக் குழி தோண்டி மண்ணுக்கு அடியில் புதைத்தாலும் அவர்கள் மீண்டும் மரமாக முளைத்துக்கொண்டு மேலே வருவது நிச்சயம்!

Scanned with CamScanner

# இயற்கை எழில்

முகம் சுருக்காத...
முன்காலை மஞ்சள் வெயில் - எழில்
அமைதியாய் சலசலக்கும்
அழகிய நதிகள் - எழில்
கரை கடக்காமல் தரை தடவும்
கடல் அலையே!
வானின் அமிழ்தமாம் மழைநீர்க்கெல்லாம்
அடிப்படை கடல்நீரே... நீ
இயற்கையின் எழிலே!
முகிலே ! நீ...
கடலுடல் தொடுபவள், கருவோடு வருபவள்
நெடுமலை துயில்பவள், நிதிதரு மலைமகள்
இருள்நிற எழிலுடனே!
கொடுவெயில் துயர்கெடவே
குளிரோடு வருவாயே ... இயற்கை எழிலாய்
கார்த்திகை தீபமெனக் காடெல்லாம்
பூத்திருக்கும் ... பூக்கள்
இயற்கையின் அழகு
மாலை அந்தியிலே -மலை வாழும் தென்றலிலே!...
தெருவாசல் முல்லையின் வசந்தம் வந்ததும்...
ஆசை கொண்டன வண்டுகள் யாவும்..
இயற்கையின் எழிலைக் கண்டு...
இளவேனில் ... முத்தம் கொடுப்பவளே! கொடி
முந்திரி பூத்தது பார்...
அத்தி மரக்கிளையின் - தளிர் ஆடும் அழகினைப்பார் ...
குக்கூவெனக் கூவிடுவாய் : குரலால் புகழ் தேடிடுவாய் ...
நல்லொரைப் பாடும் பூங்குயிலே... நீ
இயற்கையின் எழிலே!

- க.முத்துசாமி
பொருளறிவியல்/ தமிழ்

Scanned with CamScanner

# MANDRA OF PEROSPERITY

In life everything we desire is needing effort from us. Leander paes, Rajyavardhan Singh Rathore Karnam Malleswari, Late Dhirubai Ambani and the present premier citizens of our country. Dr. A.P.J. Abdul Kalam are the classical examples of prosperous persons in life,.

To be a victor in life one need not have to be brilliant but ouhat to follow a strict ideology. One needs to introspect and even retrospect to judge his her's strength and weakness. self analysis will centainly make one to explore the possibilities to achieve what he or she is dearth of and it is the first step that will lead to the corridor of prosperity. Only this self-analysis nurtures self-confidence and self reliance in a person and makes one to deem in his or her abilities. This self confidence will make one to a spire high or be ambitions. Ambition or aspiration will make one to chalkout a srategy to achieve it. One needs to work with his or hers strategy diligently.

In the real life diligence can't ruled out of properity . Initial failures and consecutive failures will surely dent one's confidence but a champion's mind remains undaunted by failures. One should be gritty cnough to match a champion's calliber to be prosperous. One needs to slog gut sily and optimistically to approach or near prosperity. Prosperity is for one who is stead fast and optimistic in his future endeavours.

In real life problems are indeed inevitable and can come is any avatar, one has to develop resilience while confronting such depressive problems.

One who is encompassing all the above mentioned qualities is having the "Mantra of prosperity". One who has this mantra of prosperity will certainly be prosperous in life and will certianly have test for life.

Scanned with CamScanner

## வாழ்க்கை வாழ்வதற்கே

வெள்ளத்தின் அபாயத்திற்கு பயந்து
தற்கொலை முயற்சியில்
ஈடுபட்டிருந்தால்...
மீனவர்களின் தேசம்
முடிந்து போயிருக்கும்..
மழைக்காலத்தில்
செத்துவிடவேண்டுமென்று
நினைத்திருந்தால் ......
பறவைகளின் தேசம்
ஊமையாயிருக்கும்....
துன்பத்திற்கு பயந்து
இறக்க முயற்சி
செய்திருந்தால்...
இவ்வுலக உயிர்கள்
மடிந்து போயிருக்கும் ....
இவ்வுலகிலே மயான
அமைதி மட்டுமே
குடி கொண்டிருக்கும் ...
அதனால்
வாழ்க்கை வாழ்வதற்கே...

-பெ. வனிதா
பொருளறிவியல் / கணிதம்

## சுமை

சிந்திக்காதவரை மூளை
தலைக்குச் சுமை
செயல்படாதவரை உறுப்புகள்
உடலுக்குச் சுமை
பயன்படாதவரை பணம்
பெட்டிக்குச் சுமை
தோண்டி எடுக்காத வரை தங்கம்
மண்ணுக்குச் சுமை
தன்னம்பிக்கை இல்லாதவரை தூக்கம்
வாழ்வுக்குச் சுமை
துணிவு இல்லாதவரை பயம்
வெற்றிக்குச் சுமை
உழைக்காதவரை மனிதா நீ
உலகிற்கே சுமை

-ஜெ.ஆர். துர்காதேவி
பொருளறிவியல் / கணிதம்

Scanned with CamScanner




S. Sathyanarayani
R. No. 73



கு. தேன்மொழி
சுழல் எண். 74
பொருளறிவியல் /கணிதம்

Scanned with CamScanner

# CRICKET PUZZLE

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| R | A | K | S | A | V | A | G | M | J |
| D | R | A | H | U | L | S | A | E | A |
| L | E | T | A | P | J | R | F | N | Y |
| Y | B | O | S | K | K | Z | R | A | A |
| U | L | A | R | A | A | L | I | H | S |
| V | E | U | M | I | C | P | D | S | U |
| R | V | X | G | F | P | H | I | A | R |
| A | E | A | O | N | S | J | I | L | Y |
| J | T | P | N | V | A | A | S | N | A |
| V | S | H | E | W | A | G | A | R | K |

*Can you find the cricket stars who are hiding within this sky. There are 16 twinkling stars. Keep guesing and keep on guesing...*

பூவையர் பூ மட்டுமல்ல





கு. தேன்மொழி
சுழல் எண். 74
பொருளறிவியல் /கணிதம்

இரா.கார்த்திகேயன்
சுழல் எண். 38
வரலாறு /தமிழ்

Scanned with CamScanner

## மாணவர் பேரவை செயலர்கள்




கே.குமார்
மாணவர்தலைவர்



அசோக்குமார்
பாடி வாழ்க்கை செயலர்



ஜி. தேன்மொழி
நூலகத்துறை செயலர்



என்.பி.சீனிவாசன்
ஆசியர் மன்றச்செயலர்



எம்.சரவணக்குமார்
உயிரறிவியல் துறைசெயலர்



எம்.முகமது இஸ்மாயில்
தமிழ்த்துறைச்செயலர்



கே.பரமேஸ்வரி
பதிவேட்டுத்துறைச்செயலர்



எம். நாகராஜன்
பொருளறிவியல் துறை
செயலர்



டி.கவிப்பிரியா
கைக்கலைத்துறைச்
செயலர்

Scanned with CamScanner



ஆர். செல்வி
மாணவர் துணைத்தலைவர்



என். மாயக்கிருஷ்ணன்
கேள்விக்காட்சிதுறை
செயலர்



எம்.முகமது இஸ்மாயில்
இலக்கிய மன்ற து.
செயலாளர்



ஆர்.மகேஸ்வரி
ஆண்டு மலர் செயலர்



பி.முகமது ஹவுஸ்
விளையாட்டுத்துறைச்
செயலர்



ஜி.கவிதா
ஆங்கிலத்துறை செயலர்



ஆர்.பாரதி
கணிதத்துறை செயலர்



பி.பூபதி
வரலாற்றுத்துறை செயலர்

Scanned with CamScanner